பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர் 19 மார்கழி 12 முஹறம் 15 இதழ் 317
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-12-77

குறைநிரப்பு படிவங்களை கையளித்தல்:

# கால எல்லை வியாழன்வரை நீடிக்கப்பட்டது

[கொழும்பு]

பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பி ஒப்படைப்பது சம்பந்தமான குறை நிரப்புப் படிவங்களை கையளிக்கும் கால எல்லை வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. குறைநிரப்பு படிவங்களை ஒப்படைக்கும் கடைசித் தினம் நேற்று 26-ம் திகதி ஆகும். ஆனாலும், இந்தப் படிவங்களை ஒப்படைப்பதில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் காரணமாக கால எல்லை மேலும் மூன்று தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக கூட்டுறவு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் நேற்று தெரிவித்தார்.

இதற்கிணங்க, இதுவரை, குறைநிரப்பு படிவங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள், அடுத்த மூன்று தினங்களுக்குள் இப்படிவங்களைச் சம்பந்தப்

(6- பக்கம் பார்க்க)



# அமெரிக்க அதிபர் கார்ட்டர் ஜனவரி 1-ம் திகதி இந்தியா வருகிறார்



புதுடில்லி, டிச 26

அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதலாம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

உத்தியோகபூர்வமாக இங்கு வரும் அதிபர் கார்ட்டர், தலைநகரில் மூன்று தினங்கள் தங்கியிருந்து இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயுடனும் மற்றைய தலைவர்களுடனும் பேச்சுகள் நடத்துவார்.

ஞாயிற்றுக்கிழமை புதுடில்லி வந்துசேரும் அமெரிக்க அதிபர், திங்கட்கிழமை காலை முதல் கூட்டத்தை நடத்துவார். இக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திரு தேசாயும் முக்கிய அமைச்சர்களும் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து விருந்துடன் கூடிய உரையாடல் நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை 3ம் திகதி இறுதிச் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறும்.

மூன்று தினங்கள் புதுடில்லியில் தங்கியிருக்கும் அமெரிக்க அதிபர் கார்ட்டர் இதர தலைவர்களையும் சந்திப்பார்.

# 78-ல் புதிய முறையில் ஆசிரிய நியமனங்கள்: கல்வி மாவட்டங்கள் 30-ஆக அதிகரிக்கப்படும்

(கண்டி)

**அடுத்த ஆண்டு முதல் ஆசிரிய நியமனங்கள், மாவட்ட ரீதியில், புதிய முறையில் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன நேற்று இங்கு நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.**

கண்டியில் நடைபெற்ற இந்தவைபவத்தில் கண்டி மாவட்ட பெற்றோர்-ஆசிரிய சங்கங்கள் கலந்துகொண்டன.

**தோட்டப் பாடசாலைகள்**

கல்வி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

'சகலதோட்டப் பாடசாலைகளும் பொறுப் பேற்கப்படும்' என்று கூறினர்.

'நாட்டிலுள்ள 400 தோட்டப் பாடசாலைகள் இன்னும் பொறுப்பேற்கப் படாமலிருக்கிறது. இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் விரைவில் சுவீகரிக்கும். சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகள் யாவும் அரசாங்க பாடசாலைகளுடன் இணையும்' என்று தெரிவித்த கல்வி அமைச்சர் மேலும் கூறியதாவது:

'ஆசிரிய நியமனங்கள் வழங்குவதிலும் புதிய மாற்றங்கள் செய்யப்படும். பல்கலைக் கழக புகுமுகப் பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில், மாவட்ட ரீதியில் மட்டுமே அடுத்த ஆண்டு முதல் இந்த ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்' என்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத் தெரிவித்தார்.

'கல்வி மாவட்டங்கள் முப்பதாக அதிகரிக்கப் படும்' என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (ம)

# முதல்வர் அர்ஸ் கட்சியிலிருந்து நீக்கம்

புதுடில்லி, டிச 26

கர்னாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ், காங்கிரஸ் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் மீது திரு. அர்ஸ் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விசேஷ கூட்டமொன்றை நடத்த காங்கிராஸ் கட்சி ஏற்பாடுகள் செய்துள்ளது.

# குழை வெட்டியவரை குண்டு பதம்பார்த்தது!

[பருத்தித்துறை]

பூவரசமரத்தில் குழைவெட்டியவரை வெடிகுண்டு பதம் பார்த்தது. படுகாயத்திற்குள்ளாகிய இவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு கிராமக் கோட்டடியில் [illegible]

பிரஸ்தாபநபர் பூவரசமரத்தில் குழைவெட்டியதாகவும், அப்போது மரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததால் அவர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகிறது. மேலும் இரு வெடிகுண்டுகள் அம்மரத்தில் இருக்கக் காணப்பட்டதாம். (ம)

# சோவியத யூனியனில் கோதுமை வீழ்ச்சி

மாஸ்கோ, டிச 26

சோவியத்யூனியனில், கோதுமை உற்பத்தியில் கடுமையான வீழ்ச்சி கண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' புதுவருட பஞ்சாங்கம் இம மாதம் 31ம் திகதி 'ஈழநாடு' பிரதியுடன் இணைந்திருக்கும். வாசகர்கள் தமது தேவைகளுக்கு முன்கூட்டியே எமது ஏஜண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும். ஏஜண்டுகள் 'ஈழநாடு' விநியோகப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

# வழமைபோல் ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு-காங்கேசன்துறை ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெறுகிறதென்று ரயில்வே பகுதி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

யாழ். ரயில் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்றிரவு 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவிக்கையில், கொழும்பிலிருந்து வரும் எல்லா ரயில்களும் நேரத்துக்கு வந்தன என்றும், காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயில்களும் நேரத்துக்குச் சென்றன என்றும் தெரிவித்தார்.

வவுனியாவுக்கும் குருநாகலைக்குமிடையே எல்லா ரயில் நிலையங்களிலும் நேற்று கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதிகமான அளவில் ஆயுதம் தரித்த இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையிலீடுபட்டிருந்தனர். எந்த இடத்திலும் அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை என்றும் ரயில் சேவைகள் வழமைபோல் நடைபெறுகிறதென்றும் பொலிஸ் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

காங்கேசன்துறை-கொழும்பு எல்லா ரயில் சேவைகளும் வழமைபோல் நடைபெறுகின்றன.

50 ரூபா சம்பள உயர்வு:

# தனியார் துறையும் வழங்கவேண்டும்

[கொழும்பு]

நிதி அமைச்சர் தெரிவித்திருந்த இடைக்கால (50 ரூபா) சம்பள உயர்வை தனியார் துறை நிறுவனங்களும் அமுல் செய்யும் வகையில் நகல் சட்டங்கள் தயாராகிவிட்டன.

இச்சட்டங்கள் ஜனவரி மாதம் 3-ந் திகதி பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

''பட்ஜட்-யோசனையில் நிதி அமைச்சர் தெரிவித்திருந்த 50 ரூபா சம்பள உயர்வை அமுல் செய்ய சில தனியார் துறை ஸ்தாபனங்கள் தயங்கு

[6-ம் பக்கம் பார்க்க]

# இலங்கையில் தமிழர் கொடுமைக்குள்ளாகும் போது இந்தியத் தமிழனின் நிலை!



## உலகப் பண்பாட்டு மாநாட்டில் கலைஞர் கருணாநிதி விளக்கம்

சென்னை, டிச 26

உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு நேரும் கேடுபாடுகளைக் களைந்து அவர்தம் நலனைக் காக்கக் கட்சிமாச்சரியங்களை மறந்து தமிழர் அனைவரும் ஒருங்கு திரண்டு பாடுபடுவோம் என்று தி. மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கூறினார்.

சென்னை எழும்பூர் பெரியார் திடலில் நடைபெற்ற உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க சிறப்பு விழாவில் கலந்து கொண்டு கலைஞர் நிகழ்த்திய உரையின் முழுபகுதிவருமாறு:

பல்வேறு நாடுகளிலிருந்து தமிழகத்தின் தலைநகரத்திலே ஒன்றுகூடி தமிழ்இனம் சிறக்க தமிழ் மொழி வளர தமிழ்ப் பண்பாடு பாதுகாக்கப்பட திட்டங்களைத் தீட்டுவதற்காக உழைப்பினை மேற்கொண்டிருக்கிற அவர்கள் அனைவருக்கும் தமிழ்நிலத்தின் சார்பில் என்னுடைய வாழ்த்துக்களை, போற்றுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் வந்த நேரம் நாங்கள் மந்திரிகளாக இருந்து வரவேற்க முடியாவிட்டாலும், அதற்குப் பதிலாக ஒரு மன்னரை (தமிழ்மன்னன்) விட்டு வரவேற்கச் சொன்னேன். எப்படி இருந்தாலும் தன்மானத்தோடு வரவேற்போம் என்பதற்காக தன்மானம் வரவேற்புரையாற்றினார். தமிழன் மன்னனாகவும் இருப்பான். தன்மானத்தோடும் இருப்பான். தமிழகத்திலே மாத்திரமல்ல, எங்கும் இருப்பான், இது நம்முடைய குளுரையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மன்றத்தில் கூடியிருக்கிறோம்.

தமிழகத்தைத் தவிர இலங்கையிலும், சிங்கப்பூரிலும், மலேசியாவிலும், மொரீஷியஸ் தீவிலும் பாரீஸ் பட்டினத்திலும், இலண்டன் மாநகரத்திலும் பிஜித்தீவிலும், இந்தோனேசியாவிலும், இன்னும் பல இடங்களிலும் தமிழ் இனம் பரவிக்கிடக்கிறது.

அந்தத்தமிழினத்தினுடைய இன்றைய நிலை— எப்படி வாழ்ந்தோம் என்கிற பெருமையை எண்ணிப்பார்த்து, எப்படி வாழ்கிறோம் என்று பெருமூச்சுவிட்டு, எப்படி வாழவேண்டும் என்று திட்டம் தீட்டுவதற்காக அந்த இனம் இங்கே கூடியிருக்கிறது.

### சந்தித்தோம் சிந்தித்தோமா?

வந்திருக்கிற அயல்நாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் ஏறத்தாழ இந்த மண்டபத்தில் மூன்று மணி நேரத்திற்கு மேலாகதங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதில் அவர்கள் தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது எல்லாம், அல்லது நாம் நம்முடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது எல்லாம் அவர்களும் நாமும் சந்தித்தோம் என்பதைத் தவிர வேறு எந்த வகையிலும் நாமும் அவர்களும் ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை; வெளிப்படுத்திக்கொள்ள இயலவில்லை.

பிஜி தீவுக்காரர் அங்கு தமிழ் மொழி சிதைந்துவிட்டது; மெல்லமெல்ல கரைந்து போய்விட்டது என்கிற கவலையைத் தெரிவிக்கவும், மலேசியாவிலிருந்து வருகிறவர்கள் அங்கே பிறமொழிகளுக்கு இருக்கிற ஆதிக்க உணர்வால் தமிழ்மொழியும், தமிழ்ச் சமுதாயமும் சீர்கெட்டு வருகிறது என்கிற ஏக்கத்தை வெளிப்படுத்தியும், சிங்கப்பூரிலிருந்து வருகிறவர்கள் அங்குள்ள பிரதமர் அங்கு ஆட்சிமொழியாக ஆங்கிலம், மலேசிய மொழி ஆகியவை தான் இருக்கும், தமிழ்மொழிக்குத்தக்க இடம் தர இயலாது, எதிர்காலத்தில் தமிழ்மொழி அங்கே பாதிக்கப்படும் என்று கூக்குரலிடவும், இலங்கையிலிருந்து வருகிறவர்கள் தமிழன் அங்கே சாகடிக்கப்படுகிறான், கற்பு சூறையாடப்படுகிறது. வெட்டு குத்து என்கிற இப்படிப்பட்ட இனபடுகொலைக்கு ஆளாகிறான் என்கிற கண்ணீரை மல்கிடவும், இத்தியாதி சூழ்நிலைகளில்தான் மூன்று மணிநேரத்தில் நாம் இருந்தோம். எனவே இந்த மாமன்றத்தில் நம்முடைய சந்திப்பு சந்தித்தோம் என்ற அளவில் மகிழ்ச்சியேதவிர சிந்தித்தோம் என்ற அளவில மகிழ்ச்சிதரத்தக்கதல்ல

ஒரு தாய், புகுந்த இடம் சென்ற தன்னுடைய பெண்கள் எல்லாம் திரும்பிவந்த போது, அவர்களுடைய புகுந்த வீடுகளில் எப்படி வாழ்கிறார்கள் என்று கேட்க, கணவன் காலையில் சம்பெடுத்தால் ஓய்வே இல்லை; அடித்துக்கொண்டேயிருக்கிறான். எதிர்ப்பேச்சுப் பேசுவதற்கு விடுவதேயில்லை என்று தாயிடம் சோகக்கதையைச் சொன்னால் அதைக்கேட்டு தாய் "அப்படியா பெண்களே, என்னுடைய நிலையும் அப்படித்தான இருக்கிறது" என்று சொல்வதைப் போலத்தான், அயல் நாட்டிலிருந்து வந்திருக்கிற அருமை உடன்பிறப்புக்களே, எங்கள் நிலைமையும் உங்கள் நிலைமை தான்.

### 'கையில் ஊமை''

தமிழ் இலக்கியத்தில் 'கையில் ஊமை' (கையில்லாத ஊமை) என்கிற ஒரு கருத்து விளக்கப்படுகிறது. பாறையில் வெண்ணெய் வைக்கப்பட்டு, அந்த வெண்ணெய் சூரியன் உச்சிக்குச் சென்ற காரணத்தால் உருகத் தொடங்கி, அதை காவல் காத்துக்கொண்டிருப்பவன் பேச முடியாத ஊமையாகவும் இருந்து, கையால் எடுக்க இயலாத அளவிற்கு கை இல்லாதவனாகவும் இருந்து, அந்த வெண்ணெய் காப்பாற்றப்படவேண்டும் என்ற ஏக்கம் ஏற்படுமானால், அது எவ்வளவு பரிதாபகரமான சூழ்நிலையோ அதைப் போலத்தான் இன்றைய தமிழகத்தில் இருக்கிற நாங்கள் கையிலாத ஊமையாகளாக இருக்கிறோம்.

தாய்த் தமிழகத்தில் இருக்கிற நாங்கள் இலங்கை வாழ் தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும் அங்கே வெண்ணெய் உருகினாலும், மலேசியாவில் இருக்கிற தமிழர்கள் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டாலும், அங்கே வெண்ணெய் உருகினாலும், நாங்கள் இங்கே கையில்லாத ஊமையர்களாக இருந்தாலும், பாறையிலிருந்து நாங்கள் உருண்டு, நாங்கள் உருளுவதைப் பார்த்து ஏன் உருளுகிறான் என்று கவனித்து அதற்குப் பிறகாவது உருகுகின்ற வெண்ணெயைத் தடுத்து நிறுத்தமாட்டார்களா என்பதற்காக உயிரைத் துச்சமாக மதித்து நாங்கள் உங்களைப் பாதுகாக்கத் தயாராக இருக்கிறோம்.

### தாய்த் தமிழகத்தில்

வீரமணியும், பெருஞ்சித்திரனாரும் பேசிய நேரத்தில் இது ஒரு அரசியல்சார்புடைய கூட்டமாக நான் கருதவில்லை. நீங்களும் கருதக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்கள். உலகெங்கும் இருக்கிற தமிழ் மக்கள் தாய்த் தமிழகத்திலே இருக்கிற அரசியல் கட்சிகள் சிலவற்றின்மீது இரக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடும். இங்கே இருக்கிற அரசியல் கட்சிகள் சில அவர்களைக் கவர்ந்து இருக்கக்கூடும். பல்வேறு அரசியல் கொள்கைகளுக்குத் தங்களை ஆட்படுத்திக்கொண்டவர்களாக இருக்கக்கூடும். அனைத்திற்கும் அப்பாற்பட்டு தமிழன் என்ற ஒரு உணர்வு இருந்தால்போதும் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசியல் மாச்சரியங்களுக்கோ, கட்சி வேறுபாடுகளுக்கோ இடம் அளித்துவிட்டால் தமிழ் இனம் வாழ இயலாது. ஆங்காங்கு இருக்கிற அவர்கள் தாங்கள் வாழ்கிற இடங்களில் உள்ள அரசியலை, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உலகத்தில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்கும் இயக்கம், தன்னகத்தே எடுத்துக்கொண்டு, அந்த ஒரு மாபெரும் சிரிய கருத்தைக் குறிக்கோளைக் கெடுத்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய திட்டவட்டமான கருத்து. அதைத்தான் உங்கள் முன்னால் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு நாடுகளில் பரவிக்கிடக்கிற தமிழ்இனமக்களுக்கு வருகிற கேடுபாடுகளை நாம் உடனடியாக தடைக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கிறோம் என்று சொன்னேன். முடிந்ததைச் செய்வோம் உயிரையும் தரத்தயார் என்று உறுதிகூறினேன்.

### தனிநாடு கோரும் காரணம்

பக்கத்தில் இருக்கிற ஈழநாட்டில் அவர்களுடைய கோரிக்கைகள் அவர்களுடைய நாட்டிற்கேற்ப, பகுதிக்கேற்ப மெல்ல மெல்ல வளர்ந்து அவைகள் கேட்கப்படாத காரணத்தினால், ஆளவந்தவர்கள் கேளா காதினராக இருந்த காரணத்தினால் நிலைமை முற்றி இன்று தனி ஈழநாடு வேண்டும் என்ற அளவிற்கு வளர்ந்திருப்பதைக் காண்கிறோம். அப்படி அங்கே வளருகின்ற நேரத்தில் அங்கே உள்ள ஒரு இயக்கம் எப்படிப்பட்ட தலைவன பிரச்சாரத்தில் ஈடுபட்டு இலங்கையில் இருக்கிற தமிழர்கள் எழுப்பிய முழக்கம் சரியா தவறு என்ற அளவில் தங்களுடைய கவனத்தைச் செலுத்துவதைவிட்டு, இங்கே இருக்கிற என்மீது சீறிப்பாய்ந்து, ஏன் ஈழத்தமிழர்கள் தனிநாடு கேட்கிறார்கள் தெரியுமா? திருகோணமலையில் ஒரு களத்தை அமைக்க கருணாநிதி திட்டமிட்டிருக்கிறான் என்று கூறியிருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் கருணாநிதியின தலையை உருட்டாமல இருந்தால் சிலருக்கு ஆறுதல் ஏற்படுவதில்லை. திருக்கோணமலையில் ஒரு தனி களத்தை உருவாக்கி அங்கே போர் வீரர்களைக் குவித்து, கப்பல்மூலமாக அவர்களை இங்கே கொண்டுவந்து, இங்கே தமிழ்நாட்டைப் பிரிக்கச் சதி என்ற அளவில் திசைதிருப்பி விடுகின்ற போக்கில் நடக்கிறார்கள். இலங்கையில் இருக்கின்ற பிரச்னைகளை இன்றைக்கு இந்திய நாட்டில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப மத்தியஅரசுக்கு எடுத்துச் சொல்லி, மத்திய அரசிடம் வாதாடி, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்ற அளவிற்கு தமிழகத்தில் திராவிடர் கழகமானாலும்சரி, திராவிடமுன்னேற்றக் கழகமானாலும்சரி வேறுபல தமிழகத்து அரசியல் கட்சிகளானாலும்சரி தங்களால் இயன்ற அளவிற்குக் கடமைகளைச் செய்தன.

### 1961ல் அண்ணா என்ன செய்தார்

1961ல் இப்போது நடைபெற்றதைப் போல பெருங் கொடுமைகள் இலங்கையில் நடைபெற்றபோது அண்ணா அவர்கள் தமிழகத்தில் பேரணி ஒன்றை நடத்தி, இலங்கைத் தூதுவர் அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டதற்கு அதற்குப்பிறகு அந்தக் கலவரம் ஓரளவு அடங்கப் பெரியதோர் காரணமாக அந்தப் பேரணி அமைந்தது அவர் வழிநின்று நான் இப்போது இலங்கையில் உள்ள மக்கள் ஆபத்திற்கு ஆளானபோது நாமும் பேரணி ஒன்றை நடத்தி, சென்னையில் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட பேரணியை நடத்தி, மத்திய சர்க்காரின் கவனம் ஈர்க்கப்பட்டு, மத்திய சர்க்காரின் அமைச்சர்களோடு கலந்து பேசும் வாய்ப்பை அங்கே ஏற்படுத்திக் கொண்டு இங்கே நான்கு கோடித் தமிழர்கள் குமுறுகிறார்கள் என்பதால் இலங்கையில் உள்ள அமளி துமளி ஓரளவு குறைந்தது என்பதை நானல்ல இலங்கையிலிருந்து வந்த நண்பர்கள் பேசியதிலிருந்து புரிந்து கொண்டிருப்பீர்கள். இலங்கையில் அமளி என்றதும் இலங்கைக்குச் செல்லலாம், கொண்டுவா நம்முடைய படையை என்றெல்லாம் அழைக்கத் தேவையில்லை நம்முடைய உணர்வுகளைக் காட்டினாலே போதும் இலங்கையில் இருக்கிற தமிழர்களுக்கு ஆதரவாக நான்கு கோடித் தமிழர்கள் இங்கே இருக்கிறார்கள் என்ற உணர்வு ஒன்றே அங்கே இருக்கிற சிங்களவர்களைப் பணியவைக்கும். அந்த உணர்வை நாம் இழந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்திப்பு.

---

## இந்திராவுக்கு கல்தா கிடைக்குமா?

புதுடில்லி, டிச. 26

காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினமாச் செய்த இந்திரா காந்தி மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறிந்து பிரம்மானந்தரெட்டி தீவிரமாகஆலோசனை நடத்தி வருகிறார்.

பிரம்மானந்தரெட்டியின் ஆதரவாளர்கள் சிலர் இந்திராவைகட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று வற்புறுத்தி வருவதாகத் தெரிகிறது.

இப்போதைய நிலையில் அவசரப்பட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்று பிரம்மானந்தரெட்டி கூறினார்.

---

## ஜனதாவில் சேர்ந்தனர்

புதுடில்லி, டிச. 26

ஆந்திர மாநிலத்தில் மூன்று காங்கிரஸ் மாஜிமந்திரிகள் உட்பட பலர் ஜனதா கட்சியில் சேர்ந்துகொண்டனர். (உ)

---

## வெள்ளப் பிரதேசத்தில் அமைச்சர்

சென்னை, டிச. 26

தமிழ்நாடு விவசாயத்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு திருச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டார். (உ)

---



[பண்டத்தரிப்பு]

பாலம் ஒன்றைக்கட்டுவதற்காகப் பண்டத்தரிப்பு கிரிமலை வீதியில் பொது மராமத்துப் பகுதியினரால் வீதிகுறுக்காக வெட்டப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதுவரை செப்பனிடும் வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இவ் வீதியால் போக்குவரத்துச்செய்யும் வாகனங்களும் பாதசாரிகளும் மிகுந்த கஷ்டமடைகின்றனர். [அ]

---

புதிய அரசு அமைக்க

## போர்த்துக்கல் ஜனாதிபதி நடவடிக்கை

லண்டன், டிச. 26

போர்த்துக்கல் ஜனாதிபதி போர்த்துக்கலில் புதிய அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இந்தவகையில் அவர் நான்கு முக்கிய கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார்.

போர்த்துக்கலின் மாஜி பிரதமர் திரு. சுவாரிஸின் அரசாங்கம் கடந்தமாதம் நம்பிக்கையில்லாப் பிரேரணையடுத்து பதவியிழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

---

## கமிட்டி நியமனம்

சென்னை, டிச. 26

தமிழ்நாட்டில்உள்ள திரைப்பட அரங்குகளின் நுழைவுக் கட்டணங்கள் தொடர்பாக ஆராயும்பொருட்டு தமிழ்நாடு அரசு கமிட்டி ஒன்றினை நியமித்துள்ளது. [உ]



# "அண்ணா வழியில் தமிழக நலன் காக்கும் அரசு இது"

## வெளிநாட்டு தமிழ்ப்பிரதிநிதிகள் மத்தியில் எம். ஜி. ஆர். உரை

சென்னை, டிச. 25

"அண்ணா வழி நின்று தமிழகநலன் காக்கும் அரசு, நின்றைய அரசு" என்று உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகப் பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்தில் தமிழ்நாடு முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் இரா. நா வீரப்பனுக்கும் (மலேசியா) மாநாட்டில் கலந்துகொள்ள வந்த மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், பிரான்ஸ், பிஜி, மொரீஷியஸ், தென்னாபிரிக்கா இரேனியன் ஆகிய நாடுகளி லிருந்து வந்த பிரதிநிதிகளுக்கும் தமிழக அரசின் சார்பில முதல்வர் காஞ்சோரமண்டல ஹோட்டலில் விருந்துகொடுத்தார்.

பொதுச் செயலாளர் திரு. கனகரத்தினம் [இலங்கை] தமிழக அரசுக்கு இலங்கை மக்களின் சார்பில் நன்றியையும், வாழ்த்தையும் தெரிவித்தார்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேசும்போது மேலும் கூறியதாவது:

"உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் தமிழகத்திற்கு வருகை தந்து இயக்கத்தின் முதலாவது மகாநாட்டை இங்கே சிறப்பாக நடத்தியிருக்கிறீர்கள்.

### தமிழர் நாகரிகம்

"தமிழர் நாகரிகமும், பண்பாடும் தொன்மையானது என்பது மட்டுமல்ல, கலைசிறந்ததாகவும் இன்றுவரை விளங்கி வருகிறதென்பதை நாம் அனைவரும் அறிவோம்.

"தாய் மொழியால் உணர்ந்து —வரலாற்றின் அடிப்படையில் அறிந்து, உயிர்த் துடிப்புடன், தங்கள் பண்பாட்டைப் பாதுகாக்கவேண்டுமென்று உருவான கருத்துத்தான் பண்பாடாக அமைந்துள்ளது.

"இதனை அனைத்து நாட்டு மக்களும் அவரவர் மொழியின் மூலமாக உணர்ந்து வரலாற்றின் மூலமாக அறிந்து உயிர்த் துடிப்புடன் தங்கள் பண்பாட்டைப் பாதுகாத்துவருவதை நாம் அனைவரும் அறிவோம்.

"தமிழைப் போற்றுகின்ற, தமிழை வளர்க்கின்ற தமிழுக்குச் சொந்தக்காரர்களாகிய நாம், ஒருமித்த உணர்வோடு ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்து, நம்முடைய கருத்துக்களை பகிரங்கமாக எடுத்து வைப்போம். விவாதங்களை உயிர்த் துடிப்புள்ளவைகளாக ஆக்குவோம். முடிவாகத் திட்டவட்டமான ஒரு கருத்தினை மக்களுக்கு நாம் எடுத்துச் சொல்வோம்.

"நம்முடைய பண்பாட்டு அடிப்படையில் அந்தக் கருத்தினை எடுத்துச்சொல்ல இங்கே கூடியிருக்கிறோம்.

இப்படிப் பண்பாட்டைப் பேணுகின்ற முயற்சியில் நாம் தீவிரமாக அக்கறை காட்ட வேண்டுமென்ற உள்ளம் இங்குள்ள எல்லோருக்கும் உண்டு.

### அண்ணா வழியில்

"தமிழை வளர்க்கின்ற கழகமாகத் தமிழைப் போற்றிப் பாதுகாக்கும் கழகமாகப் போறிஞர் அண்ணா வழியில், அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் செயற்படுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

"நான், மொரீஷியஸுக்குச் சென்றிருந்தபோது, அங்கே இருக்கின்ற தமிழ்ப் பெருமக்கள், தமிழ் நூல்களைக் கற்று உணரக்கூடிய வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள்.

"கழகச் சார்பில் மத்திய அரசு அனுமதியுடன் இலக்கிய நூல்கள், அவருக்கு அனுப்பபட்டன.

"அதற்கு மேலும் நான் அவர்களிடம் ஒரு வாக்குறுதி கொடுத்து வந்தேன்.

"மொரீஷியஸ் தீவில் உள்ளவர்கள், தமிழ் சரியாகப் படிப்பதற்கும், படித்தவர்றை சரியாகச் சொல்லிக்கொடுப்பதற்கும் வாய்ப்பில்லாத காரணத்தால், அங்கிருந்து இருவரைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தால் அவர்களுக்குத் தமிழ்மொழி அறிவை கொடுத்துச் சிறந்த ஆசிரியர்களாக உருவாக்கித் தமிழ் மொழியை வளப்படுத்த விரும்பி, அங்கு அனுப்புகிறேனென்று சொல்லியிருக்கிறேன்.

"இந்த முயற்சியை விரைவில் செயல்படுத்தக் கூடியதாக இருக்குமென்று நம்புகிறேன்

"வெளிநாட்டில் உள்ள தமிழ்ப் பேரவையாளர்கள் பண்பாட்டு அடிப்படையில் ஆனாலும் சரி, மொழி அறிவியல் துறையின் அடிப்படையில் ஆனாலும் சரி இங்கே மாநாடு நடத்த விரும்பினால் தயவுசெய்து ஆட்சியினரோடு தொடர்பு கொள்ளுங்கள்."

---

பாதிப்புற்ற இந்துக்கோவில்கள்:

## விவரம் சேகரிக்கிறது இந்து இளைஞர் பேரவை

[கொழும்பு]

ஆகஸ்ட் வன்செயல்களின் போது சேதப்படுத்தப்பட்ட, பொருட்கள் திருடப்பட்ட இந்துக் கோயில்கள் பற்றிய விபரங்களை இந்து இளைஞர் பேரவை சேகரித்துவருகிறது.

இது பற்றிய தகவல்களை ஒன்றுகத் திரட்டி, அரசு நியமித்துள்ள சன்சோனி கமிஷன் முன்னிலையில் சமர்ப்பிக்கவும், உருக்குலைந்த கோயில்களைப் புனரமைப்பதில் பொதுமக்கள், அரசு, வெளிநாட்டு நிறுவனங்கள் என்பனவற்றின் உதவியைப் பெறுவதற்குமாக பேரவை இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதென்று பேரவைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (உ)

---

# "இந்துமத நெறியில் வாழ்வைமேம்படுத்துவோம்"

- பேராசிரியர் செல்வநாயகம்

[யாழ்ப்பாணம்]

"தமிழினம் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் நம் மக்களிடையே நிலவுகின்ற சில குறைபாடுகளை அன்பு, ஆதரவு நம்பிக்கை மூலம் மாற்றி, மிகப் பழமை பொருந்திய இந்துசமய நெறிகளில் இருந்து வழுவாது பேணிப் பாதுகாத்துக்கொள்ளல்வேண்டும். இதில் பல்கலைக்கழக மாணவர்களின் பொறுப்பு மிக இன்றியமையாதது" என்று இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக இராமநாதன் மண்டபத்தில் இந்துமன்றத்தினரால் நடாத்தப்பட்ட கலைவிழாவின் காலை நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் பேராசிரியர் சோ. செல்வநாயகம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பல்கலைக்கழக மாணவர்கள், வாழ்க்கை நெறிமுறைகளில் தவறாமல் இம்மாதிரியான விழாக்களின் மூலம் கடமையுணர்ச்சியுள்ள வாழ்வை அமைத்துக்கொள்ளலாம்" என்றார்.

ஆசியுரை வழங்கிய வரலாற்றுத்துறை பேராசிரியர் கா. இந்திரபாலா பேசுகையில் இளைஞர்கள் மத்தியில் சகிப்புத்தன்மையின்மையை காணக்கூடியதாயுள்ளது. இந்துமதமும், பௌத்தமதமும், சகிப்புத்தன்மையை நன்கு போதிக்கின்றன. முன்னையோர் இந்து சமயம் சார்ந்த பண்பாடுகளில் இருந்து விலகாமல், செவ்வனவே வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். ஆனால் ஆங்கிலேய படையெடுப்புகளினால் இளைஞர்கள் சமயநெறிகளின் பண்பாடுகளில் [illegible] வெறுப்புற்று [illegible] மையை இழந்துள்ளனர். எனவே நமது இந்துசமய மரபுகளில் இருந்து விலகாமல் பழமைகளிலிருந்து மேம்பட்டுச் செல்லவேண்டும் என்றார்.

"சமய உணர்வு" பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய துணை விரிவுரையாளர் திரு. ப. கோபாலகிருஷ்ணன் தமது உரையில், "மனிதனது வாழ்க்கையில் துன்பங்களும் துயரங்களும் மனதை வருத்துகின்ற போது தனக்கு மேலே ஒரு ஆற்றல் உண்டென்பதை உணர்கின்றான். மனிதன் மனிதனாக வாழவேண்டும். நிறைமாந்தராக இருக்கவேண்டும் என்று சிந்திப்பதற்கு சமய உணர்வுகளின் வெளிப்பாடே" காரணமாயுள்ளன என்றார். (ஜெ-உ)

---

## தேசிய சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

சனிக்கிழமை நீர்கொழும்பில் நடைபெற்ற 644வது தேசிய லொத்தர்சுவீப் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு

08 R 0502

ரூ. 1,00,000

2-வது பரிசு

21 G 0542

ரூ. 40,000

3-வது பரிசு

31 W 0118

ரூ. 10,000

தலா ரூபா 2500 பெறும் 100 ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 08 A 0005 | 97 A 0589 |
| 44 A 0500 | 49 A 0499 |
| 19 A 0477 | 32 A 0682 |
| 47 A 0661 | 65 A 0501 |
| 01 B 0091 | 27 B 0465 |
| 70 B 0466 | 72 B 0743 |
| 06 C 0098 | 53 C 0295 |
| 11 D 0922 | 25 D 0081 |
| 30 D 0093 | 56 D 0497 |
| 71 D 08?7 | |
| 09 E 0422 | 28 E 0291 |
| 36 E 0355 | 36 E 0911 |
| 62 E 0899 | 75 E 0341 |
| 19 F 0640 | 43 F 0057 |
| 08 G 0950 | 69 G 0733 |
| 21 H 0096 | 21 H 0626 |
| 23 H 0638 | 29 H 0180 |
| 33 H 0059 | 83 H 0781 |
| 35 H 0129 | 41 H 0574 |
| 53 H 0724 | 67 H 0799 |
| 41 J 0481 | 45 J 0481 |
| 50 J 0934 | 69 J 0746 |
| 32 K 0788 | 47 K 0795 |
| 62 K 0733 | 72 K 0805 |
| 25 L 0261 | 57 L 0827 |
| 70 L 0484 | |
| 46 M 0433 | 52 M 0873 |
| 64 M 0128 | 80 M 0181 |
| 14 N 0134 | 30 N 0411 |
| 40 N 0827 | 77 N 0804 |
| 02 O 0580 | 06 O 0213 |
| 06 P 0439 | 17 P 0116 |
| 27 P 0817 | 33 P 0262 |
| 34 P 0956 | 40 P 0368 |
| 47 P 0 18 | 53 P 0677 |
| 77 P 0797 | |
| 16 Q 0373 | 64 Q 0057 |
| 70 Q 0633 | |
| 44 R 0954 | 66 R 0494 |
| 71 R 0576 | |
| 01 S 0993 | 09 S 0108 |
| 27 S 0999 | 50 S 0210 |
| 29 T 0618 | |
| 20 U 0614 | 42 U 0223 |
| 64 U 0568 | 70 U 0500 |
| 70 U 0979 | |
| 34 V 0211 | 38 V 0228 |
| 47 V 0824 | 62 V 0386 |
| 11 W 0690 | 33 W 0963 |
| 45 W 0524 | |
| 05 Y 0516 | 34 Y 0897 |
| 57 Y 0210 | 67 Y 857 |
| 28 Z 0328 | 58 Z 0059 |
| 64 Z 0998 | 80 Z 0616 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.)

---

பாலர் பாடசாலை

## ஆசிரியைகள் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வட இலங்கை தமிழ்ப் பாலர் ஆசிரியைகள் சங்க பொதுக்கூட்டம் யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

செல்வி இராஜேஸ்வரி தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் த இராசலிங்கம், வெ. யோகேஸ்வரன், வி. என். நவரத்தினம், வி. தருமலிங்கம், தா. திருநாவுக்கரசு, க. துரைரத்தினம், க. பொ. இரத்தினம், குசைதாசன், வீ. ஆனந்தசங்கரி, தா சிவசிதம்பரம், எசல் எம் செல்லத்தப்பு, வி. பொன்னையபலம் ஆசிரியர் சங்கப் பிரமுகர்களும் உரையாற்றுவர். (செ)

---


# சூசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

V

வடபகுதி விநியோகஸ்தர்கள்

S. P. சாமி அன் [illegible] கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

RIO (Jaffna) Daily 4 Shows

VIOLENT ONES

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 & 9-30 P. M. only
NIGHT OF THE EAGLES
(Color)

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30.
[யாழ்ப்பாணம்] எம். ஜி. ஆர் - விஜயா - நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... தேவிகா...... நாகேஷ்......
"நீலவானம்" கதைவசனம்: K. பாலசந்தர் (புதிய பிரதி)
அடுத்த வெளியீடு கலைஞர் கருணாநிதியின்
பூம்புகார் (புதிய பிரதி)

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

ரீகோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள் -
○ கமலஹாசன் ○ ரஜனிகாந்த்
○ எம். எஸ் விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய் விஜயா
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்‌ஷன்: கே. பாலசந்தர்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
☆ முத்துராமன் ☆ ஜெயசித்திரா
☆ சுந்தரராஜன் ☆ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவன் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
இன்ஸ்பெக்டர் மனைவி
திரைக்கதை - வசனம் - டைரக்‌ஷன்
A. C. திருலோகசந்தர் M. A.
இசை இன்னிசை வேந்தர்கள் சங்கர் கணேஷ்

அன்றுடவாழ்வில்

# ஈழத்தவரின் தூயதமிழ் உபயோகம்: தமிழகப் பேராசிரியர் புளகாங்கிதம்

[யாழ்ப்பாணம்]

"புவியியல் அமைப்பாலும் அரசாங்கங்களாலும் தாம் வேறுபட்டுள்ள போதிலும் எண்ணத்தாலும் உள்ளத்தாலும் ஒன்றுபட்டவர்களே" என்று அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி யாழ்ப்பாணத் தமிழ்மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார். திரு. மு. சிவதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் "நான் சுவைத்த இலக்கிய காட்சிகள்" என்ற தலைப்பில் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'கடல் எமது எல்லையைப்பிரித்து வைத்திருந்தாலும் எமது கலையும் கலாச்சாரமும் பிரிக்க முடியாதவாறு ஒன்றிணைந்துள்ளது.

## தூயதமிழ் பிரயோகம்

ஈழத்தில் தமிழ்மக்களின் அன்றாட வாழ்க்கையிலேயே தூயதமிழ் உபயோகத்தைக் காணும் போது இங்குள்ள தமிழ் மக்களுக்கு நன் தலைவணங்குகின்றேன்.

தமிழ்நாட்டில் இலக்கியத்தில் மாத்திரம் பாவிக்கப்படும் வார்த்தைகள் ஈழத்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாவிக்கப்படுவது மகிழ்ச்சிதருகிறது.

## வேற்றுமொழி ஊடுருவல்

பொதுவாக இன்றைய காலகட்டத்தில் வேற்றுமொழிச்சொற்கள் பல தமிழில் ஊடுருவித் தமிழ்மொழியின் தூய்மையை கெடுக்கின்றது. தமிழ் மொழியைப் பொறுத்தவரை இது ஒரு ஆபத்தான அம்சமாகும்".

திரு. ச. பேரின்பராஜா நன்றியுரை நிகழ்த்தினர். [உ]

வடமராட்சிப்பகுதி

# பிரயாணிகள் நலன்; டிப்போ அதிகாரி ஏற்பாடு

(நெல்லியடி)

வடமராட்சிப்பகுதி பிரயாணிகளின் நலனைக்கவனிக்க பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ முகாமையாளர் திரு. பீ. யூ. மகாலிங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்.

முதற்கட்டமாக பிரயாணிகளுக்கென்று சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்வண்டிகளில் எக்காரணம் கொண்டும் மீன், இறைச்சி போன்ற நாற்றம் தரக்கூடியதும் பிரயாணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தக் கூடியதுமான பொருட்களை ஏற்றிச் செல்லவேண்டாமென பருத்தித்துறை இ.போ.ச டிப்போவைச் சேர்ந்த சாரதிகள், நடத்துநர்களுக்கு கண்டிப்பான உத்தரவொன்றை தாம் பிறப்பித்துள்ளதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் 28-ந்திகதி முதல் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 7-ந்திகதி வரையும் நடாத்துநர் காப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் திரு மகாலிங்கம் தெரிவித்தார். இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவுள்ளோருக்கு கடமை லீவும் வழங்கப்படுமெனவும் ஆனால் அவர்கள் தமது வரவை பதிவு செய்து கொள்ளுதல் அவசியம் எனவும் கூறினர்.

# கட்டாக் காலிகளால் பயிர் அழிகிறது

[பண்டத்தரிப்பு]

மாதகல் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்களுக்குப் பலத்த சேதமேற்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களில், இப்பகுதி விவசாயிகளின் பெருமுயற்சியால் மீண்டும் நாற்றுக்கள் நடப்பட்டு நெற்பயிர்கள் ஓரளவு நல்ல முறையில் வளர்ந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழிப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. தற்போது பயிர்ச் செய்கைக் குழுக்கள் இப்பகுதியில் இயங்காதிருப்பதால் இக் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை நீக்குவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் படுவதில்லையாம். [அ]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-45
சிவாஜி — ஜெமினி
பந்தபாசம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
சிவாஜி - தேவிகா
அன்னை இல்லம்

பனம்பொருளின்

# பெருமையை எடுத்துரைத்த கூட்டணிக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

வடபகுதி தெங்கு-பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் சீவல் தொழிலாளர் குறித்து நிதி அமைச்சருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.களுக்கு இலங்கை தெங்கு பனம்பொருள் ஊழியர் சங்கம் நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

மேற்படி சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் திரு. பா. சுவயோகம் தலைமையில் நடைபெற்றபோது இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1500 ஊழியர்களதும், 8000 சீவல் தொழிலாளர்களினதும் உழைப்பை நம்பி நிற்கும் ஏராளமானோரின் ஜீவாதாரப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் கூட்டணி எம். பி.க்கள் அமைச்சருடன் ஈடுபட்டமையென்றும் இத்தீர்மானம் கூறுகிறது.

பல அமைச்சுக்களின் சூழ்நிலை விவாதங்களிலும் கலந்து கொண்டு வடபகுதிப் பொருளாதாரம் பனம் பொருளில் தங்கியுள்ளதாகக் கருத்து வெளியிட்டதற்கும் கூட்டணி எம். பி.களுக்கு இச்சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. [உ]

—

# புனருத்தாரணம்

[நெல்லியடி]

புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தான மடம் ஒன்றைப் புனரமைப்புச்செய்ய மேற்படி ஆலயத்தின் திருப்பணிச்சபை முன்வந்துள்ளது.

இம்மடத்தை ரூபா 80,000 செலவில் புனருத்தாரணம் செய்யத் திட்டமிட்டுள்ள திருப்பணிச்சபை இம்மடத்தை அன்னதானம், பண்ணிசை வகுப்புகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் கல்யாண வைபவங்களை நடாத்துவதற்கும் உபயோகிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [உ]

...

# புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம், யாழ்ப்பாணம் கணக்கியல் கல்லூரி மண்டபத்தில் கூடி, இவ்வாண்டுக்கான நடப்பு வருட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தது.

தலைவர்- இ. ஓங்காரமூர்த்தி உப தலைவர்- இ. ரதி. செயலாளர்- அ. கா. சர்வானந்தன். உப செயலாளர்- செல்வி. வி. தவமலர் பொருளாளர்- எஸ். ஜெகதீஸ்வரன். நிர்வாக உறுப்பினர்- எம். மோகனராஜ், திருமதி பீ. போல். பீ தம்பித்துரை, கே. பீ. புவனேந்திரன், கே. பூபாலன். [செ அ]

யாழ். மாவட்டத்தில் ராஜா திரையரங்கில்மட்டும்
எல்லாக்காட்சிகளுக்கும்
தமிழ்த் தலைவர் அமரர் தந்தை செல்வாவின்
இறுதியாத்திரைக்காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். ரீ. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன்
100-வது நாள்
ஜெமினி - கே. ஆர். விஜயா
சீர்காழி கோவிந்தராஜன் - விஜயகுமாரி
நடித்த
P. V. C. தயாரிப்பு
தசாவதாரம்
(கலர்)
திரைக்கதை, வசனம், டைரக்‌ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

**மணிவாக்கு**

உன்னைப்போல் உன் அயலானை நேசி

— இயேசு பிரான்

ஈழநாடு
The Eelanaadu

## பதுக்கலும் கொள்ளைலாபமும்

அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு அவற்றைக் கொள்ளை விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிரான நடவடிக்கை தீவிரப்படுத்தப்படுமென்று பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோக பிரதி இணைப்பதிகாரியுமான மேஜர் ஜெனரல் சேபால ஆட்டிகல தெரிவித்திருக்கிறார்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பதுக்கிவைப்பதும் இவற்றில் கொள்ளைலாபமடிப்பதும் பெரும் அநியாயமும் மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமுமாகும்.

ஆட்சிபீடத்துக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் பதுக்கலையும் கொள்ளை இலாபத்தையும் ஒழித்துக் கட்டுவதாகக் கூறுவது வழக்கம்.

பதுக்கல், கொள்ளை இலாபம் ஆகியவற்றுக்கெதிரான சட்டங்களிருக்கின்றன. இச்சட்ட விதிகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் இருக்கின்றனர். ஆனாலும் பதுக்கலும் கொள்ளை இலாபமும் அதிகரித்து வருகின்றனவே யொழிய அவை ஒழிந்தபாடாக இல்லை.

சமீபத்தில் வெங்காயத்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் வெளிநாட்டிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் சந்தைப்படுத்தும் திணைக்களம் மூலமே விநியோகிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஒரு தொகைக்குக் காய்கறிகள் வாங்குபவர்களுக்கே வெங்காயம் விற்பனை செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தனியார் கடைகளிலும் நடைபாதை வியாபாரிகளிடமும் இந்த இறக்குமதி வெங்காயம் கூடுதல் விலைக்கு விற்கப்படுகின்றது.

சந்தைப்படுத்தும் திணைக்களத்தில் மட்டுமே விற்கப்படுமென அறிவிக்கப்பட்ட இறக்குமதி வெங்காயம் தனியார் கடைகளுக்கும் நடைபாதை வியாபாரிகளுக்கும் எப்படி வந்தது?

இதேபோன்றுதான் அரசாங்கமே இறக்குமதி செய்வதற்கு உரிமையுள்ள பொருள்கள் சந்தைப்படுத்தும் திணைக்களத்திலும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கடைகளிலும் தட்டுப்பாடாக இருக்கும்போது தனியார் கடைகளிலும் நடைபாதை வியாபாரிகளிடமும் தாராளமாகக் கிடைப்பதற்கு என்ன காரணம்?

இந்தக் காரணங்களைக் கண்டுபிடித்தால் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதையும் பதுக்கல், கொள்ளை இலாபம் நடைபெறுவதையும் தடுப்பது கடினமல்ல.

மேற்காசியநாடுகள் பலவற்றிலுள்ளதுபோல் பதுக்கல் கொள்ளை இலாபம், களவு போன்றவற்றுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டால் இந்தப் பிரச்னைகளுக்கே இடமில்லாது போய்விடும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Lanka.

# வள்ளம் கவிழ்ந்து மூவர் பலி

(களுத்துறை)

வள்ளம் ஒன்று கவிழ்ந்ததால் மூவர் அநியாயமாகப் பலியாகினர்.

இச்சம்பவம் களுத்துறை களுகங்கையில் நிகழ்ந்துள்ளது.

எண்மர் இவ்வள்ளத்தில் பயணம் செய்ததாகவும் திடீரென வள்ளம் கவிழ்ந்ததால் மூவர் மூழ்கிமாண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களது சடலங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. (உ)

துயில் இல்லாத நோய்:

## மூதாட்டியை மீளா துயில் கொள்ள வைத்தது

(நெல்லியடி)

75 வயது மூதாட்டி ஒருவர் வாழ்வில் விரக்தியுற்று தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்.

புலோலி மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் இலகம்மா என்ற இப்பெண்ணின் மரணம் தொடர்பாக வடமராட்சிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் விசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவர் ஒரு நோயாளி என்றும் தீத்திரையில்லாத நோயால் பெரும் கஷ்டமுற்றுவந்த அவர், சம்பவதினம் கிணற்றில் குதித்து மாண்டதாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

## "தமிழீழ இலட்சியம் எனது உணர்வோடு கலந்தது"

— யாழ். எம். பி.

[யாழ்ப்பாணம்]

'இளைஞர்கள் இந்நாட்டின் முதுகெலும்புகள், தமது தமிழ் ஈழ இலட்சியத்தில் இளைஞர்களின் பங்கு மிகவும் அவசியமானது. இளைஞர்கள் தலைவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். எந்தநேரத்திலும் தங்கள் உணர்ச்சிகளைப் பாதுகாக்கக்கூடியவகையில் அவர்கள் பேச்சு செயல் அத்தனையும் இருக்கவேண்டும்.'

இவ்வாறு யாழ். எம். பி, திரு வெ. யோகேஸ்வரன், குருநகர் சென்.ஜேம்ஸ் சனசமூக நிலைய மாதர் கழகத்தினர் நடாத்திய பொருட்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார். யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. என். அமிர்தசாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில்,

'தமிழ்ஈழ இலட்சியம் என் உணர்வோடு கலந்திருக்கிறது. பலலாயிரக்கணக்கான வாக்குகளால் என்னை வெற்றிபெற ஒத்துழைப்புநல்கிய யாழ். தொகுதி மக்கள் எந்த இலட்சியத்திற்காக என்னை ஆட்சிமன்றம் அனுப்பினார்களோ அதை நிச்சயம் நிறைவேற தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினனாக இறுதிவரை இருந்து அதை நிறைவேற்றியே தீருவேன்' என்று கூறினார்.

மேலதிக அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி யோகப் பொருட்காட்சியை திறந்து வைத்தார். நிலையச்செயலாளர் வி.எம். ஜெரூட், ஆர் பி. குணரெட்ணம், திருமதி சுந்தரராஜன், செல்வி விஜயா ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (கெ-உ)

### விவசாயக் கடன்

[பண்டத்தரிப்பு]

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி மூலம் பெரும் போகத்திற்கான விவசாயக்கடன் சென்றமாதம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இச்சங்கத்தில் விவசாயக்கடன் பணம்பெற்று திருப்பிச் செலுத்தாத தவணைதப்பிய விவசாயிகளுக்கும் இவ்விவசாயக்கடனை அடுத்தவாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன் பொருட்டு மேலும் 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக மேற்படி சங்கப்பொது முகாமையாளர் திரு. நவரத்தினம் தெரிவித்தார். (உ)

......

### உதிரிப் பாகங்கள் இறக்குமதியாகும்

(கொழும்பு)

இ. போ. ச. 20 லட்சம் ரூபா பெறுமதியான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யவிருக்கிறது.

கிராமங்களில் பஸ்சேவை சீர்கெட்டிருப்பதாகவும், அந்த பஸ்களுக்காகவே இவை இறக்குமதி செய்யப்படுவதாகவும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

### சட்டப் பேரவை நாளை கூடுகிறது

சென்னை, டிச 26

தமிழ்நாடு சட்டப்பேரவை புதன்கிழமை கூடுகிறது.

**தடைஉத்தரவு**

இதற்கிடையே சென்னை மாநகரில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 14 தினங்களுக்கு தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவை புதன்கிழமை கூடுவதனைத் தொடர்ந்தே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சென்னை நகரில் ஊர்வலங்கள், கூட்டங்கள் எதுவும் நடத்த முடியாது.

## "எந்த அரசுவந்தாலும் நிலையான கல்வித்திட்டம் வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

'அரசாங்கம் மாறும்போதெல்லாம் பாடத்திட்டங்களும் மாறுவதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். கல்வியைப் பொறுத்தளவில் மாணவர்களைப் பாதிக்காத முறையில் எந்த அரசாங்கம் வந்தாலும் நிலையான ஒரு கல்விக் கொள்கையை வகுத்தல் வேண்டும்' என்று அ இ திருவள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக்கிளையின் 3வது வருடாந்தப் பொதுக்கூட்டம் மட்டுவில் வடக்கில் நடைபெற்றபொழுது மகாசபை பொதுச் செயலாளர் திரு எஸ் தில்லைநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், 1978ம் வருடம் மகாசபையினால் வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் கல்விச் சகாயநிதியைப் பெறத் தகுதியுடைய 5ம் வகுப்பு சித்தியடைந்த வள்ளுவர்குல மாணவர்கள் இம்மாத முடிவுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

'எமது சமூகமக்களின் ஜீவனோபாயமாக விளங்கும் நெசவுத் தொழில் செய்வதற்குரிய முக்கிய பொருளான நூலின் விலையேற்றத்தினால் தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத நிலையில் கஷ்டப்படுகின்றார்கள். நிறநூல்களுக்குத் தட்டுப்பாடாகவுரும் பல தொழிலாளர் மேலும் பாதிக்கப்படுகின்றனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம் என்று அவர் கூறினார்.

திரு மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். செல்லராசா, எம். தருமலிங்கம், ஆர் ஜெயராசா, பி. வேலுப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

நெசவுத் தொழிலாளரின் நலம்பேணும் நலமசருதி தொழிற்சங்கம் ஒன்று அமைப்பதென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது (ஈ-அ)

அடுத்த ஆண்டில்

## 10,000 பேருக்கு புதிய தொலைபேசி வசதிகள்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு பத்தாயிரம் பேருக்கு புதிதாக தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று தபால், தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. ஷெல்டன் ஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

பல பகுதிகளிலும் புதிதாக உபதபால் நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கிராமப்புறங்களில் தபால் சேவைகள் விஸ்தரிக்கப்படும் என்றும் தபால் அமைச்சர் கூறினார்.

### திருட்டு

(ஹப்புத்தளை)

ஹப்புத்தளை ப. நோ. கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு 13,000 ரூபா பெறுமதிமிக்க துணிவகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (உ)

### காலஎல்லை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கூட்டுறவுச் சங்க கடைகளிலோ அல்லது, அதிகாரம் பெற்ற தனியார் நிறுவனங்களிடமோ ஒப்படைக்கலாம். (ம)

### அமெரிக்காவில் சீன ஆராய்ச்சி

வாஷிங்டன், டிச. 23

அமெரிக்காவில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சி நடத்தும் பொருட்டு, சீனக்குழுவொன்று அமெரிக்கா வந்துள்ளது.

எண்ணெய் இருக்கும் இடங்களைக் கண்டுபிடித்து அகழ்வு வேலைகளை இக்குழு நடத்தும்.

### சமயபாடப் பரீட்சையில் இவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையால் நடாத்தப் பெற்ற சைவசமயப் பாடப் பரீட்சையில் சித்தி பெற்றோர் விபரம் வருமாறு:

4-ம் வகுப்பு: 1-ம் பரிசு [நால்வர்] ச. சபாநாயகி, செ. சசிகலா, பொ. ஜெயதேவி, மா. புஷ்பவல்லி. இவர்கள் நால்வரும் காரை. வடக்கு அ. மி. பாடசாலை.

2-ம் வகுப்பு: பொ. நாகபூஷணி, யாழ்ற்ரன் சனிஷ்ட பாடசாலை, தி. சிவசோதி, சைவ வித்தியாலயம், வியாவில், க. ஆனந்தராசா, வடக்கு அ. மி. பாடசாலை.

6-ம் வகுப்பு: இ லலிதாம்பிகை காரைநகர் இந்து. தி மனோரஞ்சனி சுந்தரமூர்த்தி வித்தியாசாலை, ஆ. கோமேசுவரன் காரை இந்து.

7-ம் வகுப்பு: த. ரவிச்சந்திரன் சுந்தரமூர்த்தி வித்தியாசாலை, பொ. இரதிதேவி யாழ்ற்ரன் கல்லூரி, க. நடேஸ்வரன் யாழ்ற்ரன் கல்லூரி.

8-ம் வகுப்பு: சு. செல்வநாயகம் யாழ்ற்ரன் கல்லூரி, தே செல்வராணி இந்துக் கல்லூரி, க. மங்களேஸ்வரி வியாவில் சைவத் தமிழ் வித்தியாலயம்.

9-ம் வகுப்பு: க. அருள்மலர், கா. யோகேஸ்வரி, சு. விஜயலட்சுமி, மூவரும் காரை இந்து.

### ராஷ்டிரபதி திருப்தி

சென்னை, டிச. 26

தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரிக்கும் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனுக்குமிடையே நிலவும் சௌஜன்யமான உறவு குறித்து ராஷ்டிரபதி சஞ்சீவ ரெட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளம் புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு அளித்தருக்கும் நிவாரண உதவிகள் குறித்தும் ராஷ்டிரபதி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

### தனியார்......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வதாகத் தெரியவருகிறது. இதனைச் சட்டமுறையில் நிர்ப்பந்திக்க இப்போது நகல் சட்டங்கள் தயாராகிவிட்டன. இந்தச் சட்டங்கள் அடுத்த மாதம் 3-ந் திகதி பேரவையில் சமர்ப்பிக்கப்படும்" என்று நிதி அமைச்சர் தெரிவித்தார். (ம)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க